முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் - ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவுக்கு தமிழக சட்டப்பேரவையில் இரங்கல் தீர்மானம்!

சட்டமன்றப் பேரவையில், நேற்று (7.1.2025) இந்திய முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோரது மறைவிற்கு இரங்கல் தீர்மானமும், சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி. ஆர். தமிழ்மொழி ராஜதத்தன் அவர்களுக்கு இரங்கல் குறிப்பும் நிறைவேற்றப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சென்னை, ஜன.8 - முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் சட்டமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவை நேற்று காலை 9.30 மணியளவில் கூடியதும் பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள், "நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் 'பெருமை உடைத்து இவ்வுலகு' என்ற திருக்குறளை படித்து பின்னர் அதற்கான விளக்கத்தை எடுத்துரைத்தார். ("'இந்த உலகமானது நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.")

தொடர்ந்து, மேல்மலையனூர் தொகுதி உறுப்பினர் மறைந்த தமிழ் மொழி ராஜதத்தன் மறைவுக்கு இரங்கல் குறிப்பை பேரவைத் தலைவர் படித்தார். பின்னர் அம்மையார் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பேரவையில் அனைவரும் அமைதியாக எழுந்து நின்றனர்.

அடுத்து, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் பிரதமர் மறைந்த மன்மோகன் சிங் பற்றி பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் குறிப்பிடும் போது, 2004 முதல் 2016 வரை இந்திய பிரதமராக பதவி வகித்தபோது உலக அளவில் இந்தியாவின் பெருமையை நிலை நாட்டியவர் என்றும், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியவர் என்றும், ரிசர்வ் வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட பல்வேறு நிதி தொடர்பான பதவிகள் வகித்து சாதனை புரிந்தவர் என்றும், - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழ்நாட்டிற்கு சிறப்புமிகு நல்ல பல திட்டங்கள் வழங்கியவர் என்றும் குறிப்பிட்டு தமது இரங்கலை பதிவிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மறைந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பேரவைத் தலைவர் குறிப்பிடும் போது, 1985 - 1988 வரை சத்திய மங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், 2023ஆம் ஆண்டு முதல் ஈரோடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும், 2004 முதல் 2009 வரை கோபி செட்டிப் பாளையம் தொகுதி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்து ஒன்றிய அமைச்சராகப் பணியாற்றியவரும்; பாரம்பர்யமிக்க குடும்பத்தில் பிறந்து எல்லோரிடமும் அன்பாகப் பழகியவரும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவராக பணியாற்றியவர் என்றும் குறிப்பிட்டு புகழாரம் சூட்டினார்.

இருவரின் மறைவுக்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக எழுந்து நின்று அமைதி காத்தனர்.

இதையடுத்து மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் பொருட்டு சட்டப் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம் முட்டுக்காடு படகு குழாமில் ரூ.5 கோடி மதிப்பீட்டிலான மிதவை உணவக கப்பலினை சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன், துணை மேயர் காமராஜ், மாவட்ட ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி.செம்பருத்தி துர்கேஷ், திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், பையனூர் சேகர், ஜி.சி. அன்புச்செழியன், மு.தேவராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் வாக்காளர் பட்டியலை சரிபார்த்து

வாக்காளர்களை நேரில் சந்தித்து பேசும் முக்கியப் பணியில் மும்முரமாக ஈடுபடுவீர்!

வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்களுக்கு - அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன.8- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில், புதியதாக தரப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலை வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் வீடு - வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்து, தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களை நேரில் சந்தித்து பேசும் முக்கிய பணியில் முனைப் புடன் ஈடுபட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பசரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையம் 2025 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்து வெளியிட்டுள்ளது.

திருத்தம் செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலை, காஞ்சிபுரம் - செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வெளியிட்டனர்.

நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 28. ஆலந்தூர், 29.திருப்பெரும்புதூர், 30.பல்லாவரம், 31. தாம்பரம், 32.செங்கல்பட்டு, 33. திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் களிடம் இருந்து மாவட்டக் கழகம் பெற்று, சட்டமன்ற தொகுதி வாரியாக, அந்தந்த ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்களிடம் உடனே பிரித்து இன்று வழங்கப்பட உள்ளது.

வாக்காளர் பட்டியலை பெற்ற பின்பு, அந்தந்த ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்கள், அந்தந்த பாகத்திற்குரிய வார்டு-கிளை கழக செயலாளர்கள் மூலம் வழங்கி, அந்தந்த வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA-2) வசம், கிளைக் கழக செயலாளர்கள் ஒப்படைத்திட வேண்டும்.

வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்காளர் பட்டியலை பிரித்து அந்த பாகத்தில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள அந்தந்த வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்களிடம் பிரித்து தர வேண்டும். வாக்குச்சாவடி தேர்தல்பணிக்குழு உறுப்பினர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களின் வீடு களுக்கு நேரில் சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்து அந்த வாக்காளர்களின் குடும்பத்தினரி டம் உரையாட வேண்டும்.

அந்தந்த குடும்பத்தினரிடம் மகிழ்ச்சியாக பேசி அவர்களின் தேவைகளை கேட்டறிந்து அரசு மூலம் அவர்களுக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகிறதோ, அவற்றை முடிந்தவரைநிறைவேற்றிட உதவிட வேண்டும். இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வருகிற 2026-சட்டமன்றத் தேர்தலுக்காக இப்போதிலிருந்தே வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களின் தேவைகளை உடனுக்குடன் கண்டறிந்து அதை உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அந்தந்த பகுதி-ஒன்றிய-நகர-பேரூர் கழக செயலாளர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டு மக்களையும், பேரவையையும் தொடர்ந்து அவமதிக்கும்

ஆளுநரின் செயல் அவரது பதவிக்கு அழகல்ல!

'தினகரன்' நாளேடு தலையங்கம்!

தினகரன்

தினவரி 7, 2025 செவ்வாய்க்கிழமை

அத்துமீறும் ஆளுநர்

தமிழக சட்டசபை முதல் கூட்டத்தில் உரையாற்ற வந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்த் தாய் வாழ்த்து முதலில் பாடியதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவையில் உரையாற்றாமல் திடீரென புறப்பட்டு சென்றது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக சட்டப்பேரவையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம் ஆளுநர் ஆர்.என்.ரவி உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டு, முதல் கூட்டம் நேற்று காலை தொடங்கியது. முன்னதாக சட்டப் பேரவைக்கு வந்த தமிழக ஆளுநரை சபாநாயகர் அப்பாவு வரவேற்றார். இதைத்தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. பின்னர் உரையை படிக்க எழுந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, திடீரென சட்டசபையில் இருந்து வெளியேறினார்.

சென்னை, ஜன.8- தமிழ்நாட்டு மக்களையும், அரசையும், பேரவையையும் தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல் அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல என முதல்வர் கடுமையாக விமர்சனம் செய்துள்ளதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு;-

தமிழக சட்டசபை முதல் கூட்டத்தில் உரையாற்ற வந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்த் தாய் வாழ்த்து முதலில் பாடியதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவையில் உரையாற்றாமல் திடீரென புறப்பட்டுச் சென்றது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக சட்டப்பேரவையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம் ஆளுநர் ஆர்.என்.ரவி உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டு, முதல் கூட்டம் நேற்று காலை தொடங்கியது. முன்னதாக சட்டப் பேரவைக்கு வந்த தமிழக ஆளுநரை சபாநாயகர் அப்பாவு வரவேற்றார். இதைத்தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. பின்னர் உரையை படிக்க எழுந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, திடீரென சட்டசபையில் இருந்து வெளியேறினார். 3 நிமிடம் மட்டுமே சட்டசபையில் இருந்துள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளாக அரசின் உரையை வாசிக்காமலேயே சென்றுள்ளார். தமிழ் நாடு அரசின் சாதனைகள் மற்றும் புதிய திட்டங்களுக்கான உரையை படிக்க மனம் இல்லை என்பது தான் நிதர்சனமான உண்மையாகும்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் நடந்து கொண்ட விதம் என்பது தமிழ்நாடு மக்களையும், சட்டமன்றத்தையும் அவமதிக்கும் செயலாக உள்ளது. பாரம்பரியமாக சட்டமன்றத்தில் நடை பெறும் நிகழ்வை மாற்றும் முயற்சியில் ஆளுநர் நடந்து கொண்டு உள்ளார். தேசிய கீதத்தை பாடும் வரை காத்திராமல் அதை அவமதித்ததே ஆளுநர் தான். ஆளுநர் உரையை வாசித்தால் அரசின் சாதனைகளை அடுக்கடுக்காக பட் டியலிட வேண்டும் என்பதால் ஒரு நாடகத்தை அரங்கேற்றி சென்றுள்ளார். கடந்த முறை தமிழ் நாட்டின் தலைவர்கள் பெயரை படிக்காமல் மறைத்தவர், தற்போது ஆளுநர் உரையையே படிக்காமல் சென்றுள்ளார் என அனைத்துக் கட்சிகளும், சமூக அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தேசபக்தியில் தமிழ் நாட்டு மக்களை விஞ்சி ஆளுநர் கிடையாது. சட்டமன்ற அவையை அவமதித்த ஆளுநர் உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை விட தான் பெரியவர் என்ற மனநிலையில் ஆளுநர் நடந்து கொள்கிறார் என அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

"தனது அரசியல் சட்டக் கடமைகளைச் செய்யவே மனமில்லாதவர் அந்தப் பதவியில் ஏன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்?" என்பதே அனைவர் மனதிலும் எழும் வினா. தமிழ்நாட்டு மக்களையும், அரசையும், சட்டப்பேரவையையும் தொடர்ந்து அவமதிக்கும் ஆளுநரின் செயல் அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. கடந்த ஆண்டுகளில் இருந்ததை வெட்டியும், இல்லாததை ஒட்டியும் வாசித்த ஆளுநர் இம் முறை வாசிக்காமலேயே போயிருப்பது சிறுபிள்ளைத்தனமானது. அரசியல் சட்டப்படி, ஆண்டின் தொடக்கத்தில் அரசின் உரையை மாநில ஆளுநர் வாசிப்பது சட்டமன்ற ஜனநாயகத்தின் மரபு. அதை மீறுவதையே தனது வழக்கமாக வைத்துள்ளார் ஆளுநர் ஆர்.என்.ரவி என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

வெளிநடப்பு குறித்து ஆளுநர் மாளிகை தந்த விளக்கம் ஏற்கத்தக்க அளவுக்கு இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். மரபுகளை மாற்றுவது ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.வுக்கு புதியதல்ல. ஒன்றிய அரசுக்கு விசுவாசம் காட்டும் நோக்கத்தில் ஆளுநர்கள் செயல்படுகின்றனர். பா.ஜ. ஆட்சி இல்லாத மாநிலங்களில், அம்மாநில அரசுகளுக்கு நற்பெயர் வந்துவிடக்கூடாது என்பதற்காக அத்துமீறும் ஆளுநர்களின் செயல்பாடுகள் பொது மக்களுக்கு அதிலும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். மரபுகளை மாற்றாமல் ஆளுநர் செயல்படுவது தான் சிறந்ததாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கிளைக் கழக நிர்வாகிகளுக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பொங்கல் தொகுப்புகளான வேட்டி, சட்டை, புடவை, நாட்காட்டி உடன் கூடிய பொங்கல் பரிசு பையினை வழங்கி அனைவருக்கும் வாழ்த்துகள் தெரிவித்தார்.உடன் ஒன்றிய செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் , மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் காஞ்சிப்பாடி பி.சரவணன், நாபளூர் குமார், இலட்சுமாபுரம் வேலன், இளைஞர் அணி காஞ்சிப்பாடி ஆர்.யுவராஜ் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் விநாயகம், எஸ்.சதீஷ், வெங்கடாசலம், வழக்கறிஞர் லூக்கா, திலகன், அம்பேத், சி.ஆர்.பாபு, ஜி.பாபு, விமல் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் ,ஒன்றிய பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாநில அளவிலான மாபெரும் கபடிப் போட்டி!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.- கலாநிதி வீராசாமி எம்.பி.பரிசுகள் வழங்கினார்!

மாதவரம், ஜன.8- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி மாதவரம் அடுத்த வடபெரும்பாக்கத்தில் நடைபெற்றது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் சமுதாய கூட வளாகத்தில் 5/1/2025 ஞாயிறு காலை 9 மணி முதல் 6/1/2024 திங்கள் காலை 6 மணி வரை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

17வது வட்டச் செயலாளர் கே கருணாகரன் வரவேற்புரை ஆற்றினார்.

பகுதி கழக நிர்வாகிகள் கவுன்சிலர் கே.காசிநாதன், ஆ ராஜேந்திரன், நா.மோகன் குமார் நாகூரார்,

வட்டச் செயலாளர்கள் இ.கண்ணப்பன், மாத்தூர் கா.தாமரைச்செல்வன், 17 வது வட்ட நிர்வாகிகள் சி.மூர்த்தி, சி.பாலாஜி, கே.ராஜா, முன்னாள் கவுன்சிலர் என்.கவிதா நாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம் எல் ஏ மருத்துவர் கலாநிதி வீராசாமி எம் பி, ஆகியோர் போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணியினருக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

இந்த கபடி போட்டியில் ஆந்திர மாநிலத்தில் உள்ள தடா பகுதியில் இருந்து டி.கே.எம்.முனுசாமி செலக்ட் அணி உள்பட, சேலம், திண்டுக்கல், புதுக்கோட்டை, கடலூர், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இருந்து சுமார் 32 அணிகள் கலந்து கொண்டன.நாக்அவுட் முறையில் நடைபெற்று இந்த போட்டிகளில், வெற்றி பெற்ற அணிகள் கால் இறுதி சுற்றில் வெற்றி பெற்று முடிந்தவுடன்,அரை இறுதிப் போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடின.முதல் பரிசை கண்ணன் மெமோரியல் பாரி வாக்கம் அணியினரும், இரண்டாம் பரிசை ஜி.கே.எம் மதன் பிரதர்ஸ் கூணங்குப்பம் அணியும், மூன்றாம் பரிசை வடபெரும்பாக்கம் மைக்கேல் செலக்ட் அணியும், நான்காம் பரிசை தடா வைச் சேர்ந்த டி.கே. எம். முனுசாமி செலக்ட் ஆகிய அணிகளும் பெற்றன.

போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசாக ரூபாய் 25,000 மற்றும் 20000 மதிப்புள்ள சுழல் கோப்பை வழங்கப்பட்டது.இரண்டாம் பரிசாக 15,000 ரொக்கம் மற்றும் பத்தாயிரம் மதிப்புரான சுழல் கோப்பை, மூன்றாம் பரிசாக ரூபாய் பத்தாயிரம் ரூபாய் ஐந்தாயிரம் மதிப்புள்ள சுழற் கோப்பை நான்காம் பரிசாக ரூபாய் பத்தாயிரம் மற்றும் ஐந்தாயிரம் மதிப்புள்ள தொழில் கோப்பை ஆகியவை வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ் கணேசன், மாவட்டத் துணைச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சன் முனியாண்டி, மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, டி.வினோத், ஜி.ராஜ்குமார், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்ரியன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஹெச்.பீர்.முகமது, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் எம் அமுதா, எஸ்.சுதா

16 வது வட்ட நிர்வாகிகள் வக்கீல் வெங்கடேசன் சி முத்தையா புவனேஸ்வரி மகேஷ் குமார் 23வது வட்ட துணைச் செயலாளர் வக்கீல் டி.ராஜாராம், 23 அ வட்ட பகுதி பிரதிநிதி அ.அப்துல் சமது, 15வது வட்ட நிர்வாகிகள் பத்மநாபன், பாலன், தீயம் பாக்கம் ஜான்சன், பூபாலன், ஜோசப், அன்பரசு,

17 வது வட்ட பாக முகவர்கள் என்.நாகராஜன், டி.திவாகர், வி.சுமீர், ஜி.கார்த்திக், சடையங்குப்பம் நைனியப்பன், வக்கீல் சுரேந்தர், வக்கீல் எம்.என்.தளபதி, மணலி புதுநகர் சி எம். ராஜா, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், குளக்கரை மஞ்சுநாதன், கடப்பாக்கம் மகேஷ் குமார், சாம்ராஜ். விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார், புழல் வி.ஆர்.கே. ஜவகர், பழைய நாபாளையம் தசரதன், அரியலூர் எஸ்.நாகராஜ் வடபெரும்பாக்கம் ஜி.முனிவேல், ஜி.செல்வம், எஸ்.கமலநாதன், பி.செந்தில், எம்.கோவிந்தன், இ.கார்த்திக், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை வடபெரும்பாக்கம் டாக்டர் எம்.மைக்கேல் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆர்மச்சூர் கபடி கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் கோலடி கே.கே .எஸ்.சாரதி ஆகியோர் செய்திருந்தனர்

மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன்செய்துவருகிறார்.

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாநில அளவிலான இரண்டு நாள் கபடி போட்டி 17வது வட்டம் வடபெரும்பாக்கத்தில் நடைபெற்றது. ஆந்திரா தடா மற்றும் தமிழ்நாடு முழுவதும் இருந்து 32 அணிகள் கலந்து கொண்ட இந்த போட்டியை மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. மற்றும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக அயலக அணி தலைவர் மருத்துவர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார்கள். 17–வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் வரவேற்புரையில், மாவட்ட நிர்வாகிகள் குறிஞ்சி எஸ்.கணேசன், டி.ராமகிருஷ்ணன், வட்டச் செயலாளர்கள் இ.கண்ணப்பன் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், சன் முனியாண்டி, மஞ்சம்பாக்கம் ஆர் பாபு, எஸ்.கோபாலகிருஷ்ணன், எச்.பீர்முகமது, எஸ்.உதயகுமார், எம்.அமுதா, எஸ்.சுதா, எஸ்.சிவக்குமார், கே.சண்முகப்ரியன், சி.மூர்த்தி, சி.பாலாஜி வக்கீல் வெங்கடேசன், சி.முத்தையா, டி.ராஜாராம், அ.அப்துல்சமது, பத்மநாபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.வட பெரும்பாக்கம் எம்.மைக்கேல் ஒருங்கிணைத்தார்.இறுதியாக மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என்.அஜய் தென்னவன் நன்றி கூறினார்.